# கல்லீரல் மாற்று சிகிச்சை தவிர்ப்புத் திட்டம்: 280 பேருக்கு இலவச பரிசோதனை

## மியாட் மருத்துவமனையில் தொடக்கம்

**சென்னை, ஜூன் 6:** அதிக செலவாகும் கல்லீரல் மாற்று சிகிச்சையைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தடுப்புத் திட்டம் சென்னை மியாட் மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடங்கப்படுவதை முன்னிட்டு 280 பேருக்கு ரூ.6,000 மதிப்புள்ள கல்லீரல் தொடர்பான பரிசோதனைகள் சென்னை மியாட் மருத்துவமனையில் சனிக்கிழமை இலவசமாகச் செய்யப்பட்டன என்று கல்லீரல் மாற்று சிகிச்சை துறையின் இயக்குநர் டாக்டர் சுரேந்திரன் கூறினார்.

கல்லீரலை ஆரோக்கியத்துடன் காப்பது, மாற்று சிகிச்சை செய்யும் அளவுக்கு கல்லீரல் பாதிப்பு தீவிரம் அடையாமல் அதை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை எடுத்துக் கொள்வது ஆகியவை குறித்து டாக்டர்கள் ஆர்.சுரேந்திரன், பாரி விஜயராகவன், விமல்ராஜ் வேலாயுதம், மிரியம் தாமஸ், பார்த்திபன் உள்ளிட்டோர் தொடக்க நிகழ்ச்சியில் பேசியதாவது:



சென்னை மியாட் மருத்துவமனையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லீரல் மாற்று சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு தரமான வாழ்க்கையை உறுதி செய்யும் அம்சங்கள் அடங்கிய பலகையில் கையெழுத்திட்ட டாக்டர் சுரேந்திரன். உடன் (இடமிருந்து) மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், டாக்டர் மிரியம் தாமஸ்.

கல்லீரல் பாதிப்பு தீவிரம் அடையாமல் அனைவரும் தடுத்துக் கொள்ள வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே கல்லீரல் மாற்று சிகிச்சை தடுப்புத் திட்டத்தை மியாட் மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது. மியாட் மருத்துவமனையில் சனிக்கிழமை இலவச கல்லீரல் செயல்பாடு பரிசோதனை செய்து கொண்ட 280 பேரில் 60-க்கும் மேற்பட்டோருக்கு கல்லீரலில் பாதிப்பு, 42 பேருக்கு சர்க்கரை நோய்; 24 பேருக்கு ஹெபடைடிஸ் பி பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகையோர் தொடர் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து கொண்டு உரிய சிகிச்சை செய்து கொள்ளும் நிலையில் கல்லீரல் மாற்று சிகிச்சையைத் தவிர்த்துவிட முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று சிகிச்சை செய்து கொள்வோருக்கு தரமான வாழ்க்கையை உறுதி செய்யும் அம்சங்கள் அடங்கிய பலகையில் கல்லீரல் மாற்று சிகிச்சை துறையின் இயக்குநர் டாக்டர் சுரேந்திரனும் நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸும் கையெழுத்திட்டனர்.

மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் கூறும்போது, கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டு, அறியாமை காரணமாக 90 சதவீத அளவுக்கு நிலைமை முற்றிய பிறகே பலர் சிகிச்சை பெற வருகின்றனர் என்றார்.